# சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியம் - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1:1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களிலிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 உயர் கணக்கீட்டு நியமம்

மீளாய்வாண்டிற்காக நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் காசப்பாய்ச்சல் கூற்று ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கை

நிதியத்தின் கணக்குகள் வைக்கும் போது கையாண்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1988 இன் 83 ஆம் இலக்க சுங்க (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 153(2) ஆம் பிரிவின் பிரகாரம் தண்டனை வருமானத்தில் ஏற்க வேண்டிய சகல செலவினம் கழிக்கப்பட்டதை அடுத்து மிகுதித் தொகையில் 50% வெகுமதி நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டு உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் இடையே வெகுமதியாக பகிர்ந்தளிக்கக் கூடியவகையில் பிரமாணங்கள் வகுக்கப்பட்டிருந்தன.

அதன் பிரகாரம், புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சகல உத்தியோகத்தர்களுக்கும் அக்காலத்திற்காக சுங்க மேலதிக நேரக் கொடுப்பனவு நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்த மேலதிக நேரக் கொடுப்பனவு இவ்வாறு தண்டப்பண வருமானத்தில் இருந்து கழிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமல் மேலதிக நேரக் கொடுப்பனவை நிதியத்தின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே புலனாய்வு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட மேலதிக நேரத்திற்கான கிரயம் தொடர்பான வேறாக அறிக்கை பேணப்பட்டிராமையால் புலனாய்வு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்த மேலதிக நேரக் கிரயத்தினை கணிப்பிட முடியாதிருந்தது.

(ஆ) தற்போது காணப்படும் வெகுமதி முறைத் திட்டம் மூலம் அரசாங்க வருமானத்தைப் பாதுகாப்பதற்காக இடம்பெற்றுள்ள பங்களிப்பு சர்ச்சைக்குரியதாக அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியத்தின் செயற்பாட்டு மிகை ரூபா 57,693,497 ஆக இருந்ததுடன் இதனோடு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 65,727,779 ஆனமையால் செயற்பாட்டு மிகையில் ரூபா 8,034,282 தொகையான குறைவொன்றை அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டை விட தண்டப்பணமாக சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் 18% ஆல் குறைவடைந்தமை நிதி விளைவுகளில் குறைவிற்காக பிரதானமாக தாக்கமளித்திருந்தது. எவ்வாறாயினும் இந்நிதியத்தின் கணக்கு வைத்தல் செயற்பாட்டில் நிதி பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுவது அவதானிக்கப்படாமல் இருந்ததுடன், வருமானச் செலவுக் கணக்கின் மிகையின் மூலம் ஐந்தொகையில் காணப்படும் உப நிதியங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையென்பதே அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

சுங்க வரி மோசடிகள், சட்டவிரோதமான இறக்குமதிகள் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு பிரமாணங்களை மீறல் போன்ற சட்டவிரோதமான செயற்பாடுகள் சுங்க உத்தியோகத்தர்களினால் கண்டுபிடிக்கப்படும் சந்தர்ப்பங்களில் விதிக்கப்படும் தண்டனைத் தொகை, அரசுடமையாக்கப்பட்ட பணம் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்களை விற்றமையினால் கிடைக்கப்பெற்ற பணம் முதலியவற்றில் இருந்து 50% பங்கு உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் வெகுமதியாக வழங்குவதற்காக இந்நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது.

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டு மற்றும் முன்னைய ஐந்து ஆண்டுகளுக்கு உரித்தான நிதியத்தின் வருமானம், செலவினம் மற்றும் தேறிய செயற்பாட்டு விளைவுகள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | வருமானம் | செலவினம் | | | | மொத்த செலவினம் | மிகை/ (பற்றாக்குறை) |
|---|---|---|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர் களுக்குக் கொடுப்பனவு | ஒற்றர்களுக் குக் கொடுப்பனவு | பிடித்து வைத்தல் வரி' உள்நாட்டு இறைவரி திணைக் | ஏனையவை | | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2005 | 499,855,007 | 397,283,588 | 35,206,949 | 2,653,423 | 66,978,531 | 502,122,491 | (2,267,484) |
| 2006 | 594,567,776 | 446,300,470 | 44,183,900 | 6,443,292 | 64,578,911 | 561,506,573 | 33,061,203 |
| 2007 | 1,171,679,881 | 810,441,327 | 72,757,307 | 105,428,768 | 111,382,303 | 1,100,009,705 | 71,670,176 |
| 2008 | 895,773,758 | 678,463,260 | 55,144,035 | 8,693,891 | 119,792,064 | 862,093,250 | 33,680,508 |
| 2009 | 968,064,233 | 716,618,818 | 84,506,905 | 9,132,859 | 113,226,650 | 923,485,232 | 44,579,001 |
| 2010 | 902,474,770 | 687,504,664 | 37,556,075 | 9,328,789 | 102,357,464 | 836,746,992 | 65,727,779 |
| 2011 | 873,979,003 | 574,047,509 | 106,080,370 | 33,927,845 | 102,229,782 | 816,285,506 | 57,693,497 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியத்திற்கு கிடைத்துள்ள வருமானம் ரூபா 28,495,767 ஆல் குறைவடைந்திருந்ததுடன் அக் குறைவு நூற்றுக்கு 3% வீதமாக ஆகக் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வெகுமதியாகச் செலுத்தப்பட்ட ரூபா 574,047,509 ஆன தொகை முன்னைய ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 687,504,664 உடன் ஒப்பிடுகையில் அது ரூபா 113,457,155 ஆல் அதாவது 16.5% ஆல் குறைவடைந்திருந்தது. எனினும், 2011 ஆம் ஆண்டிற்காக கணக்குப் பிரிவிற்குக் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் செலுத்தப்பட்டிராத ரூபா 192,536,859 ஆன வெகுமதிகளின் பட்டியல் 45 ஆக இருந்தது.

(இ) சுங்க அதிகாரச் சட்டத்தின் 153(2) (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம், வழங்கப்பட்டுள்ள திணைக்களக் கட்டளை இல. 118 இன் மூலம் உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் இடையே வெகுமதியைப் பகிரும் தீர்மான முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 801 மில்லியன் ரூபா 725 மற்றும் ரூபா 680 என்ற வகையில் கூட்டுத்தொகை ரூபா 2,206 மில்லியன் தொகை உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா 1,978 மில்லியன் அதாவது 90% உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வெகுமதித் தொகையாகும். வழங்கப்படக்கூடிய வெகுமதித் தொகை தொடர்பான ஆகக்கூடிய எல்லையொன்று விதிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் சில உத்தியோகத்தர்களுக்காக ஒரு தடவையில் ரூபா 90 மில்லியனை மிகைத்து வெகுமதி செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**(ஈ) எரிபொருள் கணக்கு**

குறிப்பான நியதிகள் இனங்காணப்படாமல் சுங்க வெகுமதி நிதியத்திலிருந்து ஒரு பகுதி எரிபொருள் கணக்கிற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இக் கணக்கின் மீதி முறையே ரூபா 164,569,058 தொகையும் ரூபா 182,653,578 தொகையுமாக இருந்தது. இலங்கைச் சுங்கத்தின் செலவினத் தலைப்பின் கீழ் எரிபொருளுக்காக கிடைக்கப்பெற்றிருந்த நிதிஏற்பாடுகளுக்கு மேலதிகமாக இக்கணக்கின் மூலம் முறையே ரூபா 3,000,000 மற்றும் ரூபா 2,872,905 தொகை

எரிபொருளுக்காக செலவிடப்பட்டிருந்தது. இதற்காக பெற்றுக்கொண்ட முறையான அங்கீகாரம் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

**(உ) நஞ்சு போதைப்பொருள் கணக்கு**

குறிப்பான நியதிகள் இனங்காணப்படாமல் சுங்க வெகுமதி நிதியத்திலிருந்து ஒரு பகுதி நஞ்சு போதைப்பொருள் கணக்கிற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இக் கணக்கின் மீதி ரூபா 50,264,634 ஆக இருந்தது. முன்னைய ஆண்டில் இக்கணக்கிலிருந்து ரூபா 500,000 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது இந்நிதியத்திலிருந்து. எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) மீளளிப்பு வைப்பு வெகுமதிக் கணக்கு**

இக்கணக்கில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 18,003,443 ஆக இருந்தது. திணைக்களத்தால் வழங்கப்பட்ட வெகுமதிப் பட்டியலில் இருந்து உரிய வெகுமதித் தொகையை பெற்றுக்கொள்ளாத உத்தியோகத்தர்களின் பணம் இக்கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. அவ் உத்தியோகத்தர்களுக்குரிய பணத்தை மீளக் கோரும் போது உரிய கொடுப்பனவு இக்கணக்கிற்கு வரவு வைக்கப்படும். ஆண்டின் போது இக்கணக்கிலிருந்து ரூபா 33,002,285 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்ட அளவு ரூபா 3,541,430 ஆக இருந்தது. அவ்வாறே ஆண்டின் போது இக்கணக்கிற்கு ரூபா 41,884,915 கிடைக்கப்பெற்றிருந்தது.

## 4. கணக்கு நடவடிக்கைகளும் நல்லாட்சியும்

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினத்திற்கிடையேயும் விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தியுள்ளதாக அவதானிக்கப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(ஆ) பேரேட்டுக் கணக்குகள்

(ஆ) வெகுமதி நிதியத்திற்கு உரிய துணை நிதியங்கள்

(இ) வெகுமதி நிதியப் பகிர்ந்தளிப்பு